# சொனி திபெத்தியர்கள் (Tibetans, Jone)




**Population:**
100,200 (2000)
123,400 (2010)
152,000 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 200

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Choni, Chona, Chone, Jone, Cone, Choni Tibetan, Zhuoni Tibetan, Sangemao, Sangemao Tibetans

**மக்கள்தொகை:** 77,000 in China (1987, Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Nongqu, Hebian)

**திபெத்திய புத்தமதம்:** 95%

**கிறிஸ்துவம்:** 0.2%

**வேதாகமம்:**இல்லை

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சு. ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : CDA (Choni) and KHG06 (Jone)

**கிறிஸ்துவத்தின் நிலை**




**வசிப்பிடம்:** சுமார் 1,00,000 சொனிக்கள் சீனாவின் கன்சு (Gansu) மாநிலத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள லின்தன் (Lintan) மற்றும் சொனி (Jone) மாவட்டங்களிலும் அங்கிருந்து கிழக்கில் கன்னான் (Gannan) திபெத்திய தன்னாட்சி மாகாணத்தின் பாவா (Bawa) பகுதியிலும் வாழ்கின்றனர். சிசுவான் மாநிலத்தின் வடக்கிலும் ஒரு சிறு எண்ணிக்கை உண்டு. தாவ் (Tao) நதி சொனி மாவட்டத்தின் வழியாகப் பாய்கிறது. சில ஆவணங்கள் இவர்கள் வசிப்பிடம் யுன்னான்-திபெத்திய எல்லை என்று தவறாகக் குறிப்பிடுகின்றன.




**அடையாளம்:** கி.பி. 1928 ல் ஜோசப் ராக் சொனி திபெத்தியர்களைக் கண்டுபிடித்தார். அவர் இவ்வாறு எழுதினார், 'நானும், 30 கோடி சீனர்களைப்போல, சொனி இனம் இருப்பதைக் குறித்து அறியாதவனாய் இருந்தேன்.' சீன அரசாங்கம் இவர்களை அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் எனக் கருதினாலும், அண்மையில் வெளியான ஓர் ஆவணம் இவ்வாறு கூறுகிறது 'இந்த இனத்தின் மக்களுக்கு இவர்களுக்கே உரிய வாழ்க்கை முறை உண்டு. இவர்களுடைய சிக்கலான இன அமைப்பு, வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், வீடுகள், மற்றும் உடைகள் பெரும்பாலான திபெத்தியர்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருந்து இவர்களைத் தனித்தன்மையான இனமாக காட்டுகிறது. இந்த இனப் பெண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள மூன்று இழைகளை உடைய சடைப் பின்னலைப் போடுகின்றார்கள்.'

**வரலாறு:** சொனி கி.பி.1928 வரை ஒரு தனி ராஜ்யமாக இருந்தது. சீன இராணுவ ஜெனரல் பங்யு ஷங் (Fengyu Shang) அப்பொழுது இளவரசரைப் பதவியை விட்டு நீக்கி அவருடைய நிலத்தைப் பறிமுதல் செய்தார். சொனி இனத்தைப்பற்றிய விரிவான வரலாறு கி.பி.1928 ன் நேஷனல் ஜியகிராபிக் (National Geographic) கட்டுரையில் வெளியிடப்பட்டது: 'இளவரசர் இருபதாம் சந்ததியாவார்; ஆனால் நேரடி வம்சாவளியைச் சேர்ந்தவரல்லா. ஒரு திபெத்திய அதிகாரியின் குடும்பமாகிய இவருடைய மூதாதையர்கள், தங்களுடைய மாவட்டத்தை விட்டுச் சிசுவான் மற்றும் மின் ஷன் (Min Shan) மலைத்தொடரைக் கடந்து, வழியிலுள்ள இனங்களை வென்று சமாதானப்படுத்திக்கொண்டு, கி.பி. 1404 ல் தாவ் நதியை வந்தடைந்தனர். தாங்கள் இவ்விடங்களைச் சீன சாம்ராஜ்யத்திற்காக வென்றதை பெய்ஜிங்கில் (Beijing) உள்ள ராஜ சபைக்கு அறிவித்தபோது இவர்கள் சொனி இனத்தின்மேலும், கைப்பற்றப்பட்ட நிலங்கள்மேலும் ஆளுநர்களாக்கப்பட்டனர். அப்பொழுது சீன மகாராஜா யுங் லொ (Yung Lo) ஒரு முத்திரையையும் யங் (Yang) என்ற சீனப் பெயரையும் அளித்தார்.' இன்றும் அநேக சொனி திபெத்தியர்கள் யங் என்ற பெயரை சிறப்புப் பெயராகக் கொண்டுள்ளனர்.

**மதம்:** சொனி அதன் செழிப்பான முந்தைய காலத்தில் 172 கட்டிடங்களையும் 3,800 புத்தத் துறவிகளையும் கொண்ட ஒரு பெரிய புத்த மடத்தைக் கொண்டிருந்தது. இவர்கள் வீடுகள் இவர்களது பக்தியை எடுத்துரைக்கின்றன, 'வரவேற்பறையின் வலதுபுறம், பூசைக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில், பட்டு துணியால் செய்யப்பட்ட மாலையிடப்பட்டுக் கையில் வில் அம்பைக் கொண்டுள்ள ஒரு கடவுள் சிலை, வேத புத்தகங்கள் மற்றும் பூசைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது.'

**கிறிஸ்துவம்:** கி.பி. 1922 ன் ஒரு மிஷன் அறிக்கை இவ்வாறு கூறியது: 'சொனியின் இளவரசர் 48 குலங்களை ஆட்சி செய்கிறார்; இந்த இளவரசர் நட்புணர்வுடையவராக உள்ளதால் நாம் எல்லாக் குலங்கள் மத்தியிலும் செல்ல முடியும், இவர் நமக்குப் பாதுகாப்பு அளிப்பார்... பணி செய்ய ஆட்கள் கிடைத்தால் நாம் இருக்கும் இடத்திலிருந்து மேற்கை நோக்கி முன்னேற முடியும்.' இந்நாட்களில் சுமார் 200 சொனி கிறிஸ்தவர்கள் சொனி மாவட்டத்தின் வடமேற்கில் லின்தன் மாவட்டத்தில் உள்ளனர். கன்சு மாநிலத்தின் முதல் திபெத்திய உள்ளூர் சபையானது கி.பி. 1997 ல் கட்டப்பட்டது. 'ஒரு பெண் தன் முடியை விற்றும் மற்றொரு குடும்பம் தங்கள் தொலைக்காட்சியை விற்றும் புதுச் சபையைக் கட்ட உதவிசெய்தனர்.'